பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No.33

சதித் திட்டம்

COMICS PDF TIMES

மகாபாரதம் - 7

மகாபாரதம்

மனிதகுலம் அறிந்த மிகப் பெரிய இதிகாசம் மகாபாரதம். இதை ஒரு பூரணத்துவம் பெற்ற இதிகாசமென்றே கூறலாம். இலக்கியச் சிறப்பு மட்டுமின்றி, வேதாந்த சாரத்தையும், நீதியையும் நற்பண்புகளையும் போதிக்கிறது

மகாபாரதத்தின் தோற்றம் ஒரு புதிர். பல அறிவாளிகளும் ஆராய்ச்சியாளர்களும் மகாபாரதத்தை எழுதிய வேதவியாசரின் சரியான காலத்தையும் அவ் வரலாற்று உண்மைகளையும் உறுதிப் படுத்த முயன்று தோற்றுப் போனார்கள். அந்தப் புதிர் இன்னும் விடுவிக்கப்படவே இல்லை.

ஒரு தனி மனிதரால் லக்ஷம் சுலோகங்களை இயற்ற முடியுமா ? வாயால் சொல்ல, செவியால் கேட்பதின் மூலம் பரவிய காவியம் மகாபாரதம். இது எழுதப்பட்டது கி.மு. 800லா, 600லா, அல்லது 300லா? இன்றைய நவீன ஆராய்ச்சி சாதனங்களையும் இன்றுள்ள நகரங்கள், பிரதேசங்களின் பெயர்களையும், புதை பொருள் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளையும் வைத்துக்கொண்டு மகாபாரதத்தின் வரலாற்றுச் சாத்தியக் கூறுகளை உறுதியிட முடியுமா ? இது வரை திட்ட வட்டமான முடிவு அறிவிக்கப்படவில்லை.

பாண்டவர்-கௌரவர் என்ற இரு அரச குடும்பங்களின் பகை, அதை முடிக்க ரத்த வெள்ளம் ஓடச் செய்த 18 நாள் போர்—இதுவே இந்த இதிகாசத்தின் மூலக் கரு. இது ஓர் உண்மை வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டே ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்று நம்மிடையே வாழும் மகாபாரதம், முதலில் வேதவியாசரால் இயற்றப்பட்டு, அதை வைசம்பாயனர் ஜனமேஜயருக்கு போதிக்க, அவர் சூதி என்பவருக்குக் கூற— இப்படியே கேள்வி ஞானத்தின் மூலமே இந்த மாபெரும் இதிகாசம் வாழ்ந்து வந்திருக்கிறது. காலப் போக்கில் மாற்றங்களும் சேர்க்கைகளும் இருந்திருக்கலாம். அது தவிர்க்க முடியாதது. ஆனாலும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் உயிரோட்டத் தோடு திகழும் இதிகாச காவியம் மகாபாரதம் ஒன்றே. நமது அரிய பொக்கிஷம் இது.



COMICS PDF TIMES

துருபதனைத் தலைகுனியச் செய்தபின் ஒருநாள், துரோணர் குரு இளவரசர்களின் முன்னிலையில் அர்ஜுனனிடம்...
துரோணர்:
அகஸ்தியரிடமிருந்து பிரம்மசிரஸ் என்ற அஸ்திரத்தை அக்னிவேசமுனிவர் பெற்றார். அதை அவரிடமிருந்து மிகுந்த ஆர்வத்துடன் நான் கற்றுக் கொண்டேன்.
இவ்வுலகையே நாசமாக்க வல்ல அதை நான் உனக்கு அளிக்கிறேன். அதை ஏற்பதற்குத் தகுதியானவன் நீ ஒருவன்தான்.
அதற்கான தட்சிணையை, உன் உறவுக்காரர்கள் முன்னிலையில் நீ எனக்குத் தரவேண்டும். அதுதான் முறை.


அர்ஜுனன் இணங்க, குரு துரோணர் கூறினார்.
எப்போதாவது நான் உன்னை எதிர்ப்பேனானால் நீ தயங்காமல் என்னோடு போரிட வேண்டும்.
துருபதனை வென்று கொண்ட ஓராண்டுக்குப் பிறகு உறுதி, நேர்மை, சகிப்புத் தன்மை இவற்றில் சிறந்து விளங்கிய யுதிஷ்டிரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினார் திருதராஷ்டிரன்.
நன்னடத்தை, விவேகம், பக்தி கூர்மை இவற்றில் தந்தை பாண்டுவையும் மிஞ்சியவனாக விளங்கினான்- குந்தி புத்திரனான யுதிஷ்டிரன்.
பாண்டவரின் இரண்டாமவனான பீமன் வாள், கதை ஆகியவற்றிலும் யுத்த களத்தில் தேரைச் செலுத்துவதிலும் வல்லவனாக, பலராமனிடம் பயிற்சி பெற்று சகோதரர்களுடன் நட்புக் கொண்டு வாழ்ந்து வந்தான்.

அடக்கியாளும் தன்மை, விரைந்து செயல்படுதல், ஒருதவறுமை, பல்வேறு அஸ்திரங்களைக் கையாளும் திறமை இவற்றில் வல்லவனாக விளங்கிய அர்ஜுனன் வெல்லமுடியாதவன் என்று துரோணரால் கருதப்பட்டான்.

நீதியின் பால் நின்று நன்னடத்தையோடு வாழ்ந்த சகாதேவன், தேவகுரு பிரகஸ்பதிக்கு நிகராக விளங்கினையும்....


.. சகோதரர்களுக்கு அடங்கி வாழ்ந்தான்.


தமையன்மார்களின் அன்புக்குரியவனான நகுலன் பல அபூர்வ அஸ்திரங்களின் ரகசியமறிந்தவனாக விளங்கினான்.


மூன்று ஆண்டு தவமியற்றி வெல்லமுடியாத வரம் பெற்ற சௌவீரனையே மாய்க்கும் அளவுக்கு அர்ஜுனனும், அவன் சகோதரரும் விளங்கினார்கள்.
பாண்டுவினால் கூட வென்று கொள்ள முடியாத யவன மன்னனை அர்ஜுனன் வென்று கொண்டான்.
குரு வம்சத்தவரை மதிக்காத விபுலன் கொல்லப்பட்டான்.
போர்க்களத்தில் நிகரில்லாது விளங்கியதற்கான தத்தமித்ரான் எனப் புகழப்பட்ட சுமித்திரனைப் பணிய வைத்த பிறகு...

தன் ஒற்றைத் தேர்வேற் - பீமனின் துணை
யோடு கீழை நாட்டு மன்னர்களையெல்-
லாம் வென்று அவர்களுடைய 10,000 தேர்
களைக் கைப்பற்றி, அதேபோல தென்னக-
த்தையும் வென்று ஏராளமான செல்வங்
களைக் கைப்பற்றிக் கொண்டு
திரும்பினான்.
இப்படி, பாண்டவர்கள் அண்டை அயல் நாடுகளை வெற்றி கொண்டு தங்கள் ராஜ்யத்தை விஸ்தரித்தார்கள்.
பாண்டவர்களின் இந்த வெற்றிவாகை திருதராஷ்டிரனை எரிச்சலடையச் செய்தது.

நிலைகுலைந்த அவன், அரசியல் கலையில் வல்ல மேதை கணிகர் என்பவரை அழைத்துக் கூறினான்.
மகத்தான சாதனைகள் புரியும் பாண்டவர்களைக் கண்டு பொறாமைப்படுகிறேன். அவர்களோடு நட்பாக இருக்கவா? பகைத்துக் கொள்ளவா? உங்கள் அறிவுரை தேவை.
இறுமாப்புள்ள அந்த வேதியனின் வார்த்தைகள் அரசியல் ஆழமும் கூர்மையுமாக விளங்கின.
மன்னனே! நான் கூறப்போவதைக் கேட்டுக் கோபம் அடையாதே.
ஒளிவு மறைவில்லாமல் தாக்கும் திறன்தான் ஒரு வல்லவனை மன்னனுக்குத் தேவை.
உன் பகைவனை அன்பளிப்புகளால் வீழ்த்து. ஏனல்தாயங் கொண்டோ, படை பலத்தாலோ அவனைக் கொல்.


திருதராஷ்டிரன் கேட்டான்.
விரோதியை வீழ்த்த எது சிறந்தது? சமாதானமா? மனஸ்தாபமா? ஆக்ரமிப்பா?
கணிகர் கூறினார்.
புத்தி நுட்பமுள்ள தந்திரசாலியான ஒரு நரியின் கதையைக் கூறுகிறேன், கேள்.
தன்னலவாதியான ஒரு நரி, தன் நண்பர்களான புலி, எலி, ஓநாய், கீரி இவற்றுடன் காட்டில் வாழ்ந்து வந்தது.
ஒருநாள் இவை ஒரு அழகிய மானைக் கண்டன. பலமும் வேகமும் கொண்ட அதை இவர்களால் பிடிக்க முடியவில்லை.
இவை கூடிப்பேசிய போது நரி கூறியது.
புலியாரே! இளமை, வலிமை அழகுமுடைய அதை உம்மால் பிடிக்கமுடியவில்லை.


ஆகவே அது தூங்கும் போது எலி அதன் காலைக் கடிக்கட்டும்
கால் துண்டாடப் பட்ட மானைப் புலி வீழ்த்தட்டும்.
அதன் பிறகு நாம் எல்லோரும் அதை விருந்தாக்கிக் கொள்ளுவோம்.
திட்டமிட்டபடி அவை செயல்பட்டன. எலி மானின் காலைக் கடித்துக் குதற, புலி அதைக் கொன்றது.
மானின் சடலத்தைப் பார்த்து நரி கூறியது.
நீங்கள் நீராடி வரும் வரை நான் இதைக் கண்காணிக்கிறேன்.
நரியின் சொல்படி, எல்லாம் நதியை நோக்கிப் போயின. நீராட. நரி திட்டமிடலாயிற்று.
வல்லமை மிக்க புலி முதலில் திரும்பியது.

யோசனையோடிருந்த நரியிடம் கேட்டது.
அறிவாளியே! ஏன் கவலையோடிருக்கிறாய்? இதை நாம் பங்கு போட்டு உண்போம்.
நரி கூறியது.
தீரமிக்கவரே! தன் வல்லமையினால் தான் மானைக் கொல்ல முடிந்தது என்கிறது எலி. என் வல்லமை-தான் புலிக்கு உணவளிக்கிறது என்கிறது.
அதன் தற்புகழ்ச்சியைக் கேட்ட பிறகு இந்த மாம்சம் கசக்கிறது எனக்கு.
புலி பதிலளித்தது.
அப்படியா? சரி என் இரையை நானே கொன்று உண்கிறேன்.
என்று கூறி, புலி வெளியேற எலி வந்தது. நரி அதனிடம் கூறியது.
கூறி என்ன சொல்கிறது, தெரி-யுமா. கேள்.
புலியின் நகம் பட்டு மான் மாமிசம் விஷமாக விட்டதாம். 'நரியாரே! நீர் அனுமதித்தால் எலியை நான் உணவா-க்கிக் கொள்ளுகிறேன்' என்கிறது.

இதைக் கேட்ட எலி, கிலி கொண்டு தன் பொந்தை நோக்கி ஓடியது.
அதன் பிறகு வந்த ஓநாயிடம் நரி கூறியது.
புலிக்கு ஏனோ உன் மீது கோபம். உன்னைக் கொல்லத் தன் கூட்டாளியை அழைத்து வரப் போயிருக்கிறது. உன் விருப்பம் போல் செய்.
ஓநாய், மான் மாமிசத்துக்கு ஆசைப்பட்டாலும் நரியின் வார்த்தைகளைக் கேட்டு ஓட்டம் எடுத்தது.
இப்போது கீரி வந்தது. அதனிடம் நரி கூறியது.
என் தீரத்தினால் எல்லாரையும் விரட்டி ஓட்டி விட்டேன். நீயும் என்னோடு போரிட்டு வெற்றி கொண்ட பின் அந்த இறைச்சியைச் சாப்பிடு.
கீரி பதிலளித்தது.
புலி, ஓநாய், மதிநுட்ப முள்ள எலி இவைகளையே வெற்றி கொண்ட உன் முன் நான் எம்மாத்திரம்?
என்று கூறிய கீரி ஓட்டமெடுக்க மான் மாமிசம் முழுதையும் நரி தனதாக்கிக் கொண்டது.


ஆகவே, அரசனே! உன் பகைவர்களை இவ்விதமாக ஒழிக்க வேண்டும்.
நீ உயர்ந்த பதவியிலிருக்கிறாய். நிறைந்த செல்வம் உள்ளது. பாண்டவர்களிடம் இருப்பது வீரம் மட்டுமே. அவர்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்.
உன்னையும் உன் குழந்தைகளையும் பாண்டவர்களிடமிருந்து காப்பாற்ற உன்னைத் தயார் படுத்திக் கொள். பின்னால் வருந்தாதிருக்க சுதந்திரமாகச் செயல்படு.
திருதராஷ்டிரனுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கி விட்டுக் கணிகர் திரும்பினார்.
பாண்டவர்களின் ஆற்றலை நேரில் கண்ட பொதுமக்கள் அவர்களுடைய வல்லமையைப் பற்றி வெளிப்படையாகவே புகழலானார்கள். பலர் கூடுமிடங்களிலும் தெருக்களிலும் நாட்டை ஆளுவதற்கான தகுதியுடையவன் யுதிஷ்டிரனே என்று குறிப்பிடலானார்கள்.


அவர்கள் பேச்சு:
பார்வையற்றவரான திருதராஷ்டிரன் இன்னும் மன்னராக ஆட்சி செய்வது எப்படி நியாயம் ஆகும்?
நேர்மையாளரான பீஷ்மரோ அரசாளும் தன் உரிமையை முன்பே உதறிவிட்டார். தன் சபத-த்தை நிறைவேற்றுவ-தில் பிடிவாதமாக இருக்கிறார்
இந்நாட்டைப் பாண்டவர்கள் தான் ஆள வேண்டும். இளமை, நேர்மை பெரியோர்களின் அன்புக்கு பாத்திரமான பாண்டவரில் மூத்த வரை நாம் அரியணை யில் அமர்த்துவோம்.
செய்வோம். பீஷ்மர், திருதராஷ்-டிரன் அவர் குழந்தை களை மகிழ்ச்சியோடு வாழ வைக்கக் கூடியவர் தருமர்.

யுதிஷ்டிரனுக்கு ஆதரவான மக்களின் பேச்சுக்களைக் கேட்ட துரியோதனன் வெறுப்பும் வேதனையும் பொறாமையும் கொண்டு திருதராஷ்டிரனிடம் போய் கூறினான்.
தந்தையே! உங்களையும் பீஷ்மரையும் ஒதுக்கி விட்டு, மக்கள் யுதிஷ்டிரனை மன்னனாக்க முடிவு செய்துள்ளனர். பீஷ்மர் இதை ஆதரிப்பார். ஏனென்றால் அவர் முடி துறந்தவராயிற்றே.
அந்த நாளில் உயர்ந்த புண்ணியத்தினால் பாண்டு அரசனானார். பார்வையில்லாததினால் உங்களுக்கு அந்தப் பாக்கியம் கிட்டவில்லை.
பாண்டுவின் பிள்ளை, வாரிசு உரிமைப்படி இந்த ராஜ்யத்தை அடைந்தால்- அவனுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அதே உரிமையைக் கோருவார்கள்.
அரச பரம்பரையில் நாங்களும் எங்கள் குழந்தைகளும் உலகோரால் அலட்சியப்படுத்தப் பட்டவர்களாக கீழ் மட்டத்திலேயே கிடப்போம்.

பொது மக்கள் எங்களை லட்சியமே செய்யமாட்டார்கள். உதாசீனப் படுத்து- வார்கள்.
அரசாளும் உரிமை உங் களுடையதானால், மக்கள் எங்களுக்குச் சாதக மில்லாவிட்டாலும் பொறுப்படி நாங்கள் வாழ முடியும்.
ஆகவே, தந்தையே நீங்கள் மன்னனாக இருந்- தால்தான், பிறர் தயவில் நாங்கள் வாழ்வதிலிருந்து தவிர்க்கப்படுவோம்.
சீர்தூக்கி உணரும் சக்தி அதிகமில்லாத திருதராஷ் டிரன் தன் மகன் மற்றும் கணிகரின் வார்த்தை களினால் குழம்பிப் போனான்.
துரியோதனன், துச்சாதனன், கர்ணன், சகுனி ஆகியோர் கூடி ஆலோசித்தனர்.

பிறகு துரியோதனன், திருதராஷ்டிரனிடம் வந்து கூறினான்.
ஏதாவது காரணம் கூறி பாண்டவர்களை வாரணாவதத்துக்கு அனுப்பினால்தான் அவர்களைப் பற்றிய பயமின்றி வாழ முடியும்.
தன் மகனுடைய வார்த்தைகளைக் கேட்டு சிந்தனையோடு திருதராஷ்டிரன் கூறினான்
பண்பாளனான பாண்டு கடமை தவறாதவன். உலகத்து சுகங்களை அவன் என்னுடன் பகிர்ந்து கொண்டு வாழ-வில்லை. இந்த ராஜ்யத்தையே எனக்களித்தான்.
பாண்டுவின் மகன் அதே பண்போடிருப்பதினால் தான் மக்கள் மனதில் உயர்ந்து நிற்கிறான்.
பரம்பரை அரசுரிமை அவனுக்கு பல நண்பர்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது.
அரசாங்க ஆலோசகர்களும், வீரர்களும் ஒன்று பாண்டுவின் ஆட்கள் அல்லது உறவினர்களாக இருக்கிறார்கள். மக்களும் பாண்டுவிடம் பாசமுடையவர்கள்.
அப்படியிருக்க யுதிஷ்டிரனுக்காக அவர்கள் நம்மைக் கொல்லமாட்டார்களா?

துரியோதனன் கூறினான்.
இதையெல்-லாம் நான் முன்பே அறிந்த-வன்தான்.
அதனால் வல்லவர்களுக்குப் பதவி, பணம் ஆகியவைகளைக் கொடுத்து என் வசமாக்கிக் கொண்டிருக்கிறேன்.
நிதியும் நிர்வாகிகளும் நம் ஆணைக்கு உட்பட்டிருக் கிறது.
ஆகவே, ஏதாவது திட்டமிட்டு பாண்டவர்களை வாரணவதத்துக்கு அனுப்புவதற்கு ஏற்-பாடு செய்யுங்கள்.
ஆட்சி என் பொறுப்பில் வந்த பிறகு குந்தியையும் அவள் குழந்தைகளையும் மீண்டும் வரவழைத்-துக் கொள்ளலாம்.
திருதராஷ்டிரன் கூறினான்.
இதே எண்ணம் எனக்கும் தோன்-றியது. ஆனால் தவறாகக் கருதப்-படும் என்று வெளியில் கூற வில்லை.

தவிர பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரன் யாரும் பாண்டவர்களை அனுப்ப சம்மதிக்க மாட்டார்கள்.
அவர்கள் பார்வையில் பாண்டவர்களும் நாமும் சமம். பாகுபாடு காணாத பண்பாளர்கள்.
இப்பெரியோர்களின், பொதுமக்களின் கோபத்திலிருந்து நாம் எப்படித் தப்பமுடியும்?
துர்யோதனன் கூறினான்.
பீஷ்மர் எப்போதும் நடுநிலையில் நிற்பவர்.
துரோணர் தன் மகன் இருக்குமிடத்தில் தானிருப்பார். அதில் சந்தேகமேயில்லை. அஸ்வத்தாமன் என் கட்சி.

இவ்விதம் நம்முன்னை இடத்தில்தான் விதுரர் இருப்பார். தன் மா மனையும் துரோணரையும் பிரிய மாட்டார்.
நம்மை அண்டி வாழ்பவர் விதுரர். அவர் மனம் நம் பகைவன் பாலிருந்தாலும் - பாண்டவர்களுக்கு அவர் உதவினால் அது நமக்கு ஒரு பொருட்டல்ல.
ஆகவே பாண்டவர்களையும் அவர்கள் தாயையும் அப்புறப் படுத்துங்கள். இரவு தூக்கம் இல்லாது படும் அவஸ்தை- யிலிருந்து விடுதலை பெறுவோம்.
துரியோதனனும் அவன் தம்பிகளும் வெகுமதி களாலும் பதவிகளா- லும் பலம் தேடலானார்கள்.
திருதராஷ்டிரன் வாரணா வதத்தைப் பற்றி புகழும்- படியான ஏற்பாடுகளைச் சாதுரியமாகச் செய்தான்.

அவர்கள் கூறினார்கள்.
வாரணவதத்தில் நடக்கும் பசுபதி தேவரின் திருவிழா ரொம்பப் பிரசித்தி பெற்றது. கோலாகலமான அவ்விழாவைக் காண கோடிக் கண்கள் வேண்டும்.
இத்தகைய புகழ்ச்சிகள் பாண்டவர்களின் ஆவலைக் கிளறியது.
பாண்டவர்களிடம் தோன்றியுள்ள ஆசையையறிந்த அரசன் அவர்களிடம் கூறினான்.
வாரணவதத்து விழாச் சிறப்பைப் பற்றி நானும் பல தடவை கேள்விப்பட்டிருக்கிறேன்.
அந்த திருவிழாவைக் காண உங்களுக்கு விருப்பமானால் உங்கள் தோழர்களுடன் வாரணவதத்துக்குப் போய் வாருங்கள்.
அங்குள்ள அந்தணர்களுக்கும் இசைக் கலைஞர்களுக்கும் பரிசுகள் அளியுங்கள்.


விழாக் கோலாகலங்-களை அனுபவித்து மகிழ்ந்த பிறகு சாவகாசமாக ஹஸ்-தினாபுரம் திரும்புங்கள். அவசரம் வேண்டாம்.
திருதராஷ்டிரனின் பேச்சில், தங்களை அங்கிருந்து கிளப்புவதற்-கான ஆர்வத்தை தருமர் அறிந்து கொண்டார்.
அப்ப-டியே.
துரியோதனன் தன் நம்பிக்கைக்குகந்த புரோசனனை அழைத்துக் கூறினான்.
செல்வச் செழிப்புள்ளது இப்பூமி. இதை நாம் கவனமுடன் காக்க வேண்டும்.

உன்னிடம் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. நான் சொல்கிறபடி என் விரோதிகளை நீ அழிக்க வேண்டும்.
மன்னரின் விருப்பப்படி வாரணவதத்-துத் திருவிழா-வில் பங்கேற்கப் பாண்டவர்கள் போகப் போகிறார்கள்.
நீ ரதத்தில் வேகமாக முதலில் அங்கு சென்று, ஒரு அரச மாளிகையை நிர்மாணிக்க வேண்-டும் - ஊருக்கு அருகாமையில்.
சுவரில் தீப்பற்றக்கூடிய சணல், அரக்கு ஆகியவற்றை அம்மாளிகையின் கட்டு மானத்துக்கு பயன்படுத்து. சுவர்ப்பூச்சுக்கு நெய், எண்ணெய், கொழுப்பை உபயோகி.
இவற்றை தாராள-மாக- ஆனால் சூட்சும-மாக நோக்குபவரின் பார்வையில் படாத-வாறு பயன்படுத்து.

COMICS PDF TIMES

இதனிடையே யுதிஷ்டிரர், மேலோர்களான பீஷ்மர், விதுரர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமா, காந்தாரி ஆகியோரை வணங்கி:
திருதராஷ்டிரனின் ஆணைப்படி நாங்கள் எங்கள் பரிவாரங்களுடன் அழகிய நகரமான வாரணவதத்துக்குப் போகப் போகிறோம். எங்களை வாழ்த்தி வழி அனுப்பி வைக்கவேண்டும். உங்கள் ஆசி ஆபத்துக்களுக்கு அரணாக இருந்து எங்களைக் காக்கும்.
குருவம்சத்து முதியோர் மகிழ்ந்து வாழ்த்துகின்றனர்:
உங்கள் பிரயாணம் சுகமாக சௌக்கியமாக இருக்கும். துன்பம் ஏதும் தொடராது. போய் வாருங்கள்.
பாண்டவர்கள் பெரியோர்களிடம் விடை பெற்று சக பாடிகளைத் தழுவி, குழந்தைகளால் தழுவப்பட்டு, பூஜைக்கத்தக்க மாதாசிகளை வலம் வந்து பீஷ்மர், திருதராஷ்டிரர், துரோணர், கிருபர், விதுரர் ஆகியோரின் அடி பணிந்து கிளம்பினார்கள்.


பிறகு கலக்கமுற்ற இளவரசர்கள், புயல் வேகத்தில் செல்லக்கூடிய குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஏறினார்கள்.


விதுரன் அவர்களை வழியனுப்ப முன் செல்ல, நகர மாந்தரும் உடன் சென்றனர்.


பாண்டவர்களைப் பிரியும் துன்பம் தாங்காத மக்கள் தொடர்ந்து செல்லலாயினர்.

வெளிப்படையாகப் பேசினார்கள்.
எங்கோ ஓர் ஊருக்கு
அனுப்பும் இக் கொடிய
செயலுக்கு பீஷ்மர் எப்படி
அனுமதியளித்தார்?
பாண்டுவின் மறைவுக்குப்
பிறகு அவர் குழந்தைகள்
இந்த ராஜ்யத்தின் உரிமை-
யைப் பெறமுடியாமல்
தடுத்துக் கொண்டிருக்-
கிறார் திருதராஷ்டிரன்.
தூய்மையான தருமர், வல்லவ
னான பீமன், வீரனான அர்ஜுனன்
இவர்கள் தவறான வழியில்
செல்லாதவர்கள். மாத்ரி-
யின் குழந்தைகளும்
அப்படியே.
ஓரவஞ்சனையால்
அறிவு கெட்டு விட்டது.
திருதராஷ்டிரனுக்கு
உண்மையை உணர
முடியாதவராகி
விட்டார்.
நாம் இந்த
நகரை விட்டு வெளி
யேறுவோம். யுதிஷ்-
டிரர் போகுமிடத்துக்குப்
போவோம்.


மக்களின் வேதனைமிக்க வார்த்தைகளைக் கேட்ட யுதிஷ்டிரர் சற்றே சிந்தித்துப் பிறகு கனத்த நெஞ்சோடு கூறினார்.
மன்னரின் ஆணையை நிறைவேற்றுவது எங்கள் கடமை. ஏனென்றால் தந்தையை, கடவுளைப்போல மதிக்கப்பட வேண்டியவர் மன்னர்.
நண்பர்களான நீங்கள் எங்களை ஆசிர்வதித்து விட்டு வீடு திரும்புங்கள்.
எங்களுக்கு நன்மை பயக்கும் செயல்களை தக்க தருணத்தில் செய்தால்தான் அது பயனுள்ளதாக இருக்கும்.
நகரமாந்தர் விடை பெற்றுத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

COMICS PDF TIMES

கானகத்தை எரிக்கும் நெருப்பின் தன்மையை அறிந்தவன், பாதுகாப்பான மறைவிடத்தில் தங்கி தீயின் தாக்குதலுக்கு ஆளாகாமல் உயிர் பிழைத்துக் கொள்ளுவான்.
விரோதி அளிக்கும் உலோகமற்ற ஆயுதங்களை ஏற்பவனும் கூட நெருப்பிலிருந்து தப்ப முடியும்...
..வெளியேறுவதற்கான பல வழிகளைக் கொண்ட பூமியில் தோண்டப்பட்ட வளையின் உதவியால்.

முன்னோக்கிச் செல். வழி புலப்படும். ஐம்புலன்களை வென்று கொண்டவனை யாராலும் வென்று கொள்ள முடியாது.
யுதிஷ்டிரர் கூறினார்.
நான் புரிந்து கொண்டேன்.
இப்படி விதுரன் அவர்களை எச்சரித்து விட்டு ஊர் திரும்பினார்.
பிறகு குந்தி யுதிஷ்டிரனிடம் கூறினாள்.
விதுரன் உன்னோடு ஏதோ பேசினான் என்ன அது?
அவன் கூறியதற்கு நீ இணக்கம் தெரிவித்தாய். எங்களுக்கு ஏதும் புரியவில்லை.
நாங்கள் அதைத் தெரிந்து கொள்ளலாம் என்றால் அவன் கூறியதை எங்களுக்கு விளக்கிச் சொல்.


யுதிஷ்டிரன் கூறினான்:
நமக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள மாளிகையில் ஆபத்துக்கு இடமுண்டு என்று எச்சரித்தார். தப்பி வெளியேறும் வழி உண்டு என்றும் அறிவித்தார்.
புலன்களை அடக்கியாளத் தெரிந்தவன் இவ்வுலகை ஆளுவான் என்றார்.
புரிந்து கொண்டதாக நான் கூறினேன்.
விதுரனின் உபதேசத்தை ஆயுதமாகத் தாங்கி வாரணாவதத்துக்குச் சென்றார்கள் பாண்டவர்கள்.
வைசம்பாயனர் கூறிய, வியாச மகா காவியமான மகாபாரதத்தின் ஏழாம் நாள் கதை முடிவுற்றது.

செய்திகள் வாசிப்பது

பூந்தளிர் அமர்சித்திரக்கதை

★ உலோகத்துக்குப் பதிலாக உபயோகப்படுத்தக்கூடிய புதிய பிளாஸ்டிக் பொருள் ஒன்றை ஜப்பானிய மிஸூபிஷி கம்பெனி உருவாக்கி இருக்கிறது. இதற்கு 'ரெனி' என்று பெயரிட்டிருக்கிறார்கள். உறுதியுடனும், வளையும் தன்மையும் கொண்டது இது. இந்தப் பிளர்ஸ்டிக்கிலிருந்து ஆணிகள் கூடத் தயாரிக்கலாம். இதன் உத்தேச விலை ஒரு கிலோ ரூ.52.

★ சிதம்பரம் அருகே உள்ள புவனகிரியில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் பிறந்து வளர்ந்த வீட்டைத் தமிழக அரசு வாங்கி அதில் ராகவேந்திரருக்கு நினைவாலயமும் மணிமண்டபமும் ரூ.10 லட்சம் செலவில் கட்ட அரசு தீர்மானித்துள்ளது. புவனகிரி பட்டிச் சந்தில் அம்மகான் வாழ்ந்த இல்லம் உள்ளது.

★ கட்டிடங்களைச் சுற்றி குறைந்தபட்சம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மரங்களை வளர்ப்பவர்களுக்கு வரிச் சலுகையும் இதர சலுகைகளும் அளிக்கலாம் என்று பிரதமர் ராஜீவ் யோசனை கூறியுள்ளார். வீடுகள், தொழிற்சாலைகளைச் சுற்றிலும் மரங்களை வளர்ப்பதைக் கட்டிட வரியுடன் இணைக்க வேண்டும் என ராஜீவ் கூறியுள்ளார்.

★ தற்போதைய நவநாகரிக உலகத்தின் முன்பு தோன்றியுள்ள சவால்களைச் சமாளிக்கும் விதத்திலும் இந்தியாவின் மிகத் தொன்மையான பாரம்பரியக் கலாசாரத்தைப் பேணிக் காக்கும் வகையிலும் இலக்கிய பாரம்பரியத்தையொட்டியும் இந்தியாவின் புதிய கல்விக் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் தெரிவித்தார். புதிய கல்விக் கொள்கைப்படி பாடத் திட்டங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பங்கள் பற்றிய விஷயங்கள் இடம் பெறும்.

★ இந்திய செயற்கைக் கோள் இன்சாட் 1—சி-யை விண்வெளியில் செலுத்த இருக்கும் நாசா விண்வெளி ஓடத்தில் பயணம் செய்ய பரதத்திலிருந்து, பெங்களூர் விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனத்தைச் சேர்ந்த என்.சி பட்டும், திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சிக் கேந்திரத்தைச் சேர்ந்த பி.ராதாகிருஷ்ணனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் விஞ்ஞானி, மற்றவர் இஞ்சினீயர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
PRINTED AT PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND
POOMPATTA PUBLICATIONS—PRINTING DIVISION, COCHIN
1986 February 10

AMAR CHITRA KATHA

11 KRISHNA
12 SHAKUNTALA
13 THE PANDAVA PRINCES
14 SAVITRI
15 RAMA
16 NALA DAMAYANTI
17 HARISCHANDRA
18 THE SONS OF RAMA
19 HANUMAN
20 MAHABHARATA
21 CHANAKYA
22 BUDDHA
23 SHIVAJI
24 RANA PRATAP
25 PRITHVIRAJ CHAUHAN
26 KARNA
27 KACHA
28 VIKRAMADITYA
29 SHIVA PARVATI
30 VASAVADATTA
31 SUDAMA
32 GURU GOBIND SINGH
33 HARSHA
34 BHEESHMA
35 ABHIMANYU
36 MIRABAI
37 ASHOKA
38 PRAHLAD
39 PANCHATANTRA I
40 TANAJI
41 CHHATRASAL
42 PARASHURAMA
43 BANDA BAHADUR
44 PADMINI
45 JATAKA TALES I
46 VALMIKI
47 GURU NANAK
48 TARABAI
49 RANJIT SINGH
50 RAM SHASTRI
51 RANI OF JHANSI
52 ULOOPI
53 BAJI RAO I
54 CHAND BIBI
55 KABIR
56 SHER SHAH
57 DRONA
58 SURYA
59 URVASHI
60 ADI SHANKARA
61 GHATOTKACHA
62 TULSIDAS
63 SUKANYA
64 DURGADAS
65 ANIRUDDHA
66 ZARATHUSHTRA
67 THE LORD OF LANKA
68 TUKARAM
69 AGASTYA
70 VASANTASENA
71 INDRA & SHACHI
72 DRAUPADI
73 SUBHADRA
74 AHILYABAI HOLKAR
75 TANSEN
76 SUNDARI
77 SUBHAS CHANDRA BOSE
78 SHRIDATTA
79 JATAKA TALES II
80 VISHWAMITRA
81 THE SYAMANTAKA GEM
82 MAHAVIRA
83 VIKRAMADITYA'S THRONE
84 BAPPA RAWAL
85 AYYAPPAN
86 ANANDA MATH
87 BIRBAL THE JUST
88 GANGA
89 GANESHA
90 CHAITANYA MAHAPRABHU
91 HITOPADESHA I
92 SAKSHI GOPAL
93 KANNAGI
94 NARSINH MEHTA
95 JASMA OF THE ODES
96 SHARAN KAUR
97 CHANDRAHASA
98 PUNDALIK & SAKHU
99 RAJ SINGH
100 PURUSHOTTAM DEV & PADMAVATI
101 VALI
102 NAGANANDA
103 MALAVIKA
104 RANI DURGAVATI
105 DASHARATHA
106 RANA SANGA
107 PRADYUMNA
108 VIDYASAGAR
109 TACHCHOLI OTHENAN
110 SULTANA RAZIA

Acquaint your children with their cultural heritage

111 SATI & SHIVA
112 KRISHNA & RUKMINI
113 RAJA BHOJA
114 GURU TEGH BAHADUR
115 PAREEKSHIT
116 KADAMBARI
117 DHRUVA & ASHTAVAKRA
118 KING KUSHA
119 RAJA RAJA CHOLA
120 DAYANANDA
121 VEER DHAVAL
122 ANCESTORS OF RAMA
123 EKANATH
124 SATWANT KAUR
125 UDAYANA
126 JATAKA TALES III
127 THE GITA
128 VEER HAMMIR
129 MALATI & MADHAVA
130 GARUDA
131 BIRBAL THE WISE
132 RANAK DEVI
133 MARYADA RAMA
134 BABUR
135 DEVI CHOUDHURANI
136 RABINDRANATH TAGORE
137 SOORDAS
138 PANCHATANTRA II
139 PRINCE HRITADHWAJA
140 HUMAYUN
141 PRABHAVATI
142 CHANDRA SHEKHAR AZAD
143 A BAG OF GOLD COINS
144 PURANDRA DASA
145 BHANUMATI
146 VIVEKANANDA
147 KRISHNA & JARASANDHA
148 NOOR JAHAN
149 ELEPHANTA
150 TALES OF NARADA
151 KRISHNADEVA RAYA
152 BIRBAL THE WITTY
153 MADHVACHARYA
154 CHANDRA GUPTA MAURYA
155 JNANESHWAR
156 BAGHA JATIN
157 MANONMANI
158 ANGULIMALA
159 THE TIGER AND THE WOODPECKER
160 TALES OF VISHNU
161 AMRAPALI
162 YAYATI
163 PANCHATANTRA III
164 TALES OF SHIVA
165 KING SHALIVAHANA
166 THE RANI OF KITTUR
167 KRISHNA & NARAKASURA
168 THE MAGIC GROVE
169 LACHIT BARPHUKAN
170 INDRA AND VRITRA
171 AMAR SINGH RATHOR
172 KRISHNA & THE FALSE VASUDEVA
173 KOCHUNNI
174 TALES OF YUDHISHTHIRA
175 HARI SINGH NALWA
176 TALES OF DURGA
177 KRISHNA AND SHISHUPALA
178 RAMAN OF TENALI
179 PAURAVA AND ALEXANDER
180 INDRA AND SHIBIRAJA
181 GURU HAR GOBIND
182 THE BATTLE FOR SRINAGAR
183 RANA KUMBHA
184 ARUNI AND UTTANKA
185 HITOPADESHA II
186 TIRUPPAN & KANAKADASA
187 TIPU SULTAN
188 DR AMBEDKAR
189 THUGSEN
190 KANNAPPA
191 THE KING IN A PARROT'S BODY
192 RANADHIRA
193 KAPALA KUNDALA
194 GOPAL & THE COWHERD
195 JATAKA TALES IV
196 HOTHAL
197 THE RAINBOW PRINCE
198 TALES OF ARJUNA
199 CHANDRALALAT
200 AKBAR

Available at
PAI & CO.
Ernakulam, Calicut, Madras, Trivandrum
And all other Leading Book Sellers

MAHABHARATA 7

© IBH Publishers Pvt. Ltd. 1980. The Tamil Edition published by arrangement with IBH Publishers Pvt. Ltd., Mahalaxmi Chambers, 22, Bhulabhai Desai Road, Bombay-400 026.

Editor: **Anant Pai** *Script:* **Kamala Chandrakant & T. M. P. Nedungadi**
Art works: **Dilip Kadam**

Regd. No: R N 36195/84 Poontalir TN/MS (c) 744
1986 February 10 AMAR CHITRA KATHA Price : Rs. 1.50